**வாசிக்க**: **தானியேல்** 1:1-9

**பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை**

பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு வந்து, அதை முற்றிகைபோட்டு யூதா ராஜாவாகிய யோயாக்கீமையும் மற்றும் சிலரையும் சிறைபிடித்து பாபிலோனிற்கு கூட்டி சென்றான். அப்படி கூட்டி சென்ற இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே ராஜகுலத்தார்களிலும் துரைமக்களிலும் யாதொரு மாசும் இல்லாதவர்களும், அழகானவர்களும், சகல ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் நிபுணரும், ராஜாவின் அரமனையில் சேவிக்கத் திறமையுள்ளவர்களுமாகிய சில வாலிபரைக் கொண்டுவரவும்,

அவர்களுக்குக் கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும் கற்றுக்கொடுக்கவும் ராஜா தன் பிரதானிகளின் தலைவனாகிய அஸ்பேனாசுக்குக் கற்பித்தான். ராஜா, தான் உண்ணும் போஜனத்திலேயும் தான் குடிக்கும் திராட்சரத்திலேயும் தினம் ஒரு பங்கை அவர்களுக்கு நியமித்து, அவர்களை மூன்றுவருஷம் வளர்க்கவும், அதின் முடிவிலே அவர்கள் ராஜாவுக்கு முன்பாக நிற்கும்படி செய்யவும் கட்டளையிட்டான். அவர்களுக்குள் யூதா புத்திரராகிய தானியேல். அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள் இருந்தார்கள். தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம்பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான். தேவன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தார்.

**கேள்வி**:

தானியேல் வேண்டாமென ஒதுக்க ராஜாவின் உணவில் அப்படி என்ன தீட்டு இருந்தது..? மற்ற யூதர்கள் ஒன்றும் சொல்லவில்லையே..!

**பதில்**:

தானியேல் சிறுவனாக யூதா தேசத்தில் இருந்தபோதே தேவனாகிய கர்த்தரை தேடுவதிலும், அவருக்கு பிரியமானது எது என ஆராய்ந்து அதை கடைகொள்வதில் ஜாக்கிரதையுடைய வாலிபனாயிருந்தான். யூதஜனம் தேவனுக்கு பிரியமில்லாததை செய்து தேவபிரசன்னத்தை இழந்ததினால் இப்போது அடிமைகளாக பாபிலோன்

வந்ததையும் அறிந்திருந்தான். வேதத்தை படித்தபடியினால் யோசேப்போடு தேவன் எகிப்திலே இருந்ததினால் வந்த ஆசீர்வாதத்தை நம்பினான். பாபிலோன் ராஜாவின் உணவில் உள்ள மாமிசமெல்லாம் அவனுடைய தேவர்களுக்கு படைத்த பலியிலிருந்து சமைத்தது என அறிந்த உடனே, அது எவ்வளவு ருசியுள்ளதாயிருந்தாலும் என் தேவனுக்கு அருவருப்பானதை நான் தொடமாட்டேன் என இருதயத்தில் தீர்மானித்து ஜெபித்து பின் அதிகாரியிடம் கேட்டான். தேவன் தயவு கிடைக்க செய்தார். மற்ற யூதர்களில் அநேகர் வேதத்தை சரியாக படிக்காததால் தேவனுக்கு பிரியமானது எது என்றே தெரியாது. தெரிந்த சிலர் ராஜாவுக்கு பயந்து சாப்பிட்டனர். சிலரோ ருசியுள்ள உணவில் மயங்கி சாப்பிட்டனர். ஆனால் தேவனுக்கு பிரியமானதை செய்ய தீர்மானித்த தானியேலுடைய வாழ்க்கையில் கர்த்தர் என்ன செய்தார் என இந்த வாரம் முழுதும் பார்க்க போகிறோம். நீங்களும் தேவனில் அன்பு கூர்ந்து அவருக்கு பிரியமில்லாததை உதறிவிடுவீர்களா…?

கர்த்தருக்குள் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள்.

எபேசியர் 5 :10

**ஜெபம்**

பரிசுத்தமுள்ள தகப்பனே! பாவமான காரியங்களில் ஈடுபடாமல் பரிசுத்தமாய் வாழ கிருபை தாங்கப்பா. தானியேலுக்கு உதவியது போல எங்களுக்கும் உதவுங்கப்பா. ஆமென்